DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | பாலகிருஷ்ணன் |
| Father's Name | : | எல்லப்பக்கவுண்டர் |
| Village | : | லக்கபெத்தனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 16th day of May 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது லக்கபெத்தனபள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து போன சண்முகம் எனது அண்ணன் மகன் ஆவார். சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பாக மாலை சுமார் 07.00 மணியளவில் நான் குந்தப்பள்ளி கிராமத்தில் இருந்த போது எனக்கு தெரிந்த நபர் எனக்கு போன் செய்து சனசந்திரம் கூட்டு ரோடு அருகே முத்துகானம் என்பவரது நிலத்து அருகே சண்முகத்திற்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்றேன். நான் செல்லும் போது, கூட்டம் நிறைய கூடி இருந்தது. சண்முகத்திற்கு இடது பக்க நெஞ்சில், வலது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் தான் ஆம்புலன்ஸ் மூலமாக அவரது உடலை ஏற்றி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் நானும் கிருஷ்ணிகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு சவக்கிடங்கின் முன்பாக நடைபெற்ற பிரேத விசாரணையில் கலந்து கொண்டேன். அதன் பின்னர் புவனேஸ்வரி புகார் கொடுத்தார். அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

இறந்து விட்டதாக சொல்லும் சண்முகம் உங்கள் அண்ணன்

மகனா என்றால் ஆமாம். உங்களுக்கு நெருங்கிய சொந்தம் என்றால் ஆமாம். உங்களுக்கு போன் செய்து தகவல் சொன்னவர் பெயர் என்ன என்றால் பெயர் ஞாபகத்தில் இல்லை, ஊர்க்காரர் ஒருவர் தான் தகவல் சொன்னார். உங்களுக்கு போன் மூலம் தகவல் சொல்லும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் 06.45 – 07.00 மணிக்குள் இருக்கும். குந்தப்பள்ளிக்கும் சனசந்திரம் கூட்டு ரோடு அருகே முத்துகானம் என்பவரது நிலத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 கி.மீ. தூரம் இருக்கும். அங்கிருந்து எவ்வளவு நேரத்திற்குள் சம்பவம் இடம் வந்து சேர்ந்தீர்கள் என்றால் அரை மணி நேரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு யார் யார் வந்தீர்கள் என்றால் நானும் சிதம்பரமும் வந்தோம். மேற்கூறிய விவரங்களை போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளீர்களா என்றால் ஆமாம். நீங்கள் வருவதற்கு அரை மணி நேரம் ஆனதால் அதற்குள் அங்கு கூட்டம் நிறைய சேர்ந்திருக்கும் என்றால் ஆமாம். கூட்டம் அதிகமாக இருந்ததால் அடிபட்டவரை உங்களால் பார்க்க முடியவில்லை என்றால் சரியல்ல, நானும் அங்கிருந்த மற்றவர்களும் அவரை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்தோம். நீங்களும் உங்கள் ஊர்க்காரர்களும் சேர்ந்து தான் அவரை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்தீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு உங்களுடன் ஏற்றி அனுப்பி வைக்க உதவியவர்களின் பெயர்களை சொல்லுங்கள் என்றால் இருட்டு என்பதால் சரியாக அடையாளம் சொல்ல முடியவில்லை. மருத்துவமனைக்கு நீங்கள் சென்ற பிறகு புவனேஸ்வரி எவ்வளவு நேரம் கழித்து மருத்துவமனைக்கு வந்தார் என்றால் அரை மணி நேரம் கழித்து வந்தார். பிரேத பரிசோதனையின் போது பஞ்சாயத்தாரிடம் கையெழுத்து வாங்குவார்கள், அந்த சமயத்தில் நீங்கள் கையெழுத்து செய்தீர்கள் என்றால் ஆமாம். உங்களுடன் சேர்ந்து கையெழுத்து செய்தவர்கள் யார் யார் என்றால் நானும், சிதம்பரமும் கையெழுத்து போட்டோம், மற்றவர்கள் யார் என்று தெரியாது. அதன் பிறகு போலீசார் உங்களிடம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW2 |
| Name | : | சிதம்பரம் |
| Father's Name | : | ராஜப்பன் |
| Village | : | லக்கபெத்தனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | விவசாயம் |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 16th day of May 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது லக்கபெத்தனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சண்முகம் எனது ஊர்க்காரர் ஆவார். கடந்த 30.12.2019 ஆம் தேதி மாலை சுமார் 06.45 – 07.00 மணியளவில் குந்தப்பள்ளி கிராமத்தில் நான் இருந்தேன். பஞ்சாயத்து தேர்தல் நேரம். மணி என்பவர் எனக்கு போன் செய்து எனது ஊர்க்காரர் சண்முகம் மற்றும் அவருடன் வந்த இரண்டு நபர்களுக்கு சென்னசந்திரம் முத்து என்பவரது நிலத்தின் அருகில் விபத்து ஏற்பட்டதாக சொன்ன தகவலின் பெயரில் நானும், சாட்சி பாலகிருஷ்ணனும் சம்பவ இடத்திற்கு சென்றோம். சண்முகத்திற்கு மார்பில் அடிபட்டிருந்தது, கை உடைந்திருந்தது. மற்றும் அவருடன் வந்த கந்தன் என்பவருக்கு தலையில் அடிபட்டிருந்தது மற்றும் இராமலிங்கம், முனிரத்தினம் ஆகியோருக்கு உடலில் இரத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர், ஆம்புலன்ஸ் மூலமாக நாங்கள் சண்முகம் மற்ற மூவரையும் அனுப்பி வைத்தோம். பின்னர் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மேற்படி விபத்தில் சண்முகம் இறந்து விட்டதாக தகவல் கேள்விப்பட்டோம். சம்பவ இடத்தில் இரண்டு கார்கள் அடிபட்டிருந்தது. சண்முகத்தின் பிரேத விசாரணையில் நாங்கள் கலந்து கொண்டோம். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை

செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

அ.சா.1 வும், நீங்களும் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். அ.சா.1 உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் ஊர்க்காரர். விபத்தில் அடிபட்ட சண்முகம் மற்றவர்கள் உங்கள் ஊரைச் சேர்ந்தவர்களா என்றால் ஆமாம். விபத்தில் அடிபட்ட சண்முகத்துடன் சேர்ந்து நால்வரும் ஒரே வயதுக்காரர்கள் என்றால் சரிதான். சண்முகம் வெளியூரில் குடியிருந்தார், மற்றவர்கள் உள்ளூரில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். தேர்தல் நேரம் என்பதால் அது ஒரு சந்தோஷமான நாள் தான் என்றால் சரிதான். பொதுவாக தேர்தல் நேரத்தில் கிராமத்தில் ஒரே வயதுடைய நபர்கள் ஒன்று கூடும் போது மது அருந்துவார்கள் என்றால் சில பேர் மது அருந்துவார்கள், சில பேர் மது அருந்தாமலும் இருப்பார்கள். நீங்கள் தகவல் கேள்விப்பட்டு எவ்வளவு நேரத்திற்குள் சம்பவ இடம் வந்தீர்கள் என்றால் 10 நிமிடங்களில் வந்தோம். எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ. இருக்கும். தகவல் கேள்விப்பட்டு நீங்களும் அ.சா.1 வும் தான் ஒன்றாக வந்தீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் அங்கு செல்வதற்கு முன்பே ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்து ஆம்புலன்ஸ் அங்கு வந்து விட்டது என்றால் நாங்கள் போன பிறகு தான் ஆம்புலன்ஸ் வந்தது. சண்முகத்தை மட்டும் ஆம்புலன்சில் ஏற்றினீர்களா என்றால் இல்லை, அடிபட்ட அனைவரையும் ஆம்புலன்சில் ஏற்றினோம். மருத்துவமனையில் போலீசார் பஞ்சாயத்தாரிடம் கையெழுத்து வாங்கும் போது, நீங்களும் கையெழுத்து போட்டீர்கள் என்றால் இல்லை, காவல் நிலையத்தில் தான் என்னை விசாரித்து கையெழுத்து பெற்றார்கள். எத்தனை நாள் கழித்து காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டீர்கள் என்றால் சம்பவத்தன்றே இரவு காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டேன். அப்போது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் இரவு 12.00 மணி இருக்கும், புவனேஸ்வரி புகார் கொடுத்தார் அப்போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். பாலகிருஷ்ணனும், நீங்களும் தான் கையெழுத்து செய்தீர்கள் என்றால் நாங்களும் செய்தோம், மற்றவர்களும் செய்தார்கள்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஓம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | புவனேஸ்வரி |
| Father's Name | : | கோவிந்தன் |
| Village | : | ஒசூர் |
| Taluk | : | ஒசூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கம்பெனி |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 16th day of May 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது ஒசூரில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சண்முகம் எனது கணவர் ஆவார். எனது கணவருக்கு சொந்தமான கார் Honda I10 பதிவு எண்.KA 51 6496 ஆகும். கடந்த 30.12.2019 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு எனது கணவர் ஒசூரில் உள்ள எனது வீட்டிலிருந்து கிளம்பி சொந்த ஊரான லக்கபெத்தனபள்ளிக்கு புறப்பட்டு சென்றார். அது தேர்தல் நேரம் என்பதால் அவர் ஓட்டு போடுவதற்காக சொந்த ஊருக்கு சென்றார். அவருடன் அவரது நண்பர்களான கந்தன் மற்றும் இரண்டுநபர்கள் சென்றார்கள். சனசந்திரம் அருகே செல்லும் போது எதிரில் வந்த சேன்றோ கார் ஒன்று எனது கணவர் ஓட்டிச் சென்ற கார் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனது மாமியாருக்கு போன் செய்த போது நான் தகவல் தெரிந்து கொண்டேன். பின்னர் எனது மைத்துனர் நாகேந்திரன் என்பவரும் விபத்து குறித்து தகவல் சொன்னார். பின்னர் தகவல் கேள்விப்பட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு வந்து எனது கணவரை பார்த்தேன். அவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். எனது கணவருடன் காரில் பயணம் செய்தவர்களுக்கும் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் இது

சம்பந்தமாக குருபரப்பள்ளி காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். அந்த புகாரை நான் சொல்ல எனது மைத்துனர் எழுதினார். நான் அதை படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அந்த புகார் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆகும். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத விசாரணையின் போது போலீசார் என்னை விசாரித்தார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நீங்கள் உங்கள் மாமியாருக்கு எத்தனை மணிக்கு போன் செய்தீர்கள் என்றால் என் கணவருக்கு போன் செய்தேன், அவர் எடுக்காததால் எனது மாமியாருக்கு 07.00 மணிக்கு போன் செய்தேன். உங்கள் மாமியார் விபத்து நடந்து விட்டது என்று மட்டும் தான் சொன்னார்கள் என்றால் ஆமாம். நீங்கள் மாமியாரிடம் பேசி அரை மணி நேரம் கழித்து உங்கள் மைத்துனர் போன் செய்தார் என்றால் ஆமாம். நீங்கள் எவ்வளவு நேரத்திற்கு ஒசூரிலிருந்து கிளம்பினீர்கள் என்றால் 07.15 மணி இருக்கும். பஸ்சில் வந்தீர்களா என்றால் இல்லை, காரில் வந்தேன். கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு எப்போது வந்தீர்கள் என்றால் 08.15 மணிக்கு வந்தேன். நீங்கள் வருவதற்குள் உங்கள் கணவரின் உடலை பிரேத பரிசோதனை அறையில் வைத்து விட்டார்கள் என்றால் சரிதான். பிணவறையில் இருந்ததால் நீங்கள் வெளியில் இருந்து தான் பார்க்க முடிந்தது என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு குருபரப்பள்ளி காவல் நிலையத்தில் புகார் அளித்தீர்கள் என்றால் 10.30 – 11.00 மணி இருக்கும். புகார் கொடுப்பதற்கு யார் யாருடன் சென்றீர்கள் என்றால் நானும், எனது மைத்துனரும், மாமியார், எனது அப்பா ஆகியோர் சென்றோம். நீங்கள் சொன்ன விவரத்தை தான் புகாரில் எழுதினார்கள் என்றால் ஆமாம். உங்கள் கணவர் சண்முகம் அவரது நண்பர்களுடன் எங்கு சென்றார் என்றால் நல்லூரில் உள்ள அவரது தங்கையை பார்க்க சென்றதாக மாமியார் கூறி தெரிந்து கொண்டேன். மேற்கூறிய விவரத்தை புகாரிலோ, அல்லது வாக்குமூலத்திலோ சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. விபத்து எப்படி ஏற்பட்டது என்ற விவரத்தை யார் உங்களிடம் சொன்னார்கள் என்றால் எனது மாமியாரும், மைத்துனரும் சொன்னார்கள். உங்கள் மாமியாருக்கும், மைத்துனருக்கு இந்த விவரம் எப்படி தெரியும், யார் சொல்லி தெரியும் என்று நீங்கள் அவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். உங்கள் மாமியார் பெயர் என்ன என்றால் எல்லம்மாள். உங்கள் மைத்துனர் என்ன படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இந்த விபத்தில் யார் யாருக்கு என்ன

அடிபட்டது என்று சொன்னார்கள் என்றால் எனது கணவருக்கு அடிபட்டதை மட்டும் தெரிவித்தார்கள். மற்றவர்கள் யார் யாருக்கு என்ன அடிபட்டது என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரில் வந்த கார் ஓட்டுநருக்கும் அடி ஏற்பட்டது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. உங்களுக்கு தகவல் சொன்னவர்கள் தவறான தகவல் சொல்லி உள்ளார்கள் அதன் பேரில் நீங்கள் தவறான புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சேன்ட்றோ காரின் ஒட்டுநருக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்தால் மயக்க நிலையில் உள்ளார், அதனால் அவரால் விபத்து குறித்து புகார் கொடுக்க முடியவில்லை என்றால் அது பற்றி தெரியாது. உங்கள் கணவர் ஓட்டிய வாகனம் தான் அதிவேகமாக சென்று எதிரில் வந்த காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது, அதை மறைத்து பொய் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பொய்யான புகாரை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஓம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.